# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.18/2023

**CNR.No.TNCB19000**

Date, 19.11.2025 DW1

| பெயர் | ரங்கசமி | வயது | 43 |
|---|---|---|---|
| த/பெ | ராமசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சின்னகள்ளிப்பட்டி | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 19th November 2025

பி வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் 9 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 7 ம் பிரதிவாதி எனது அப்பா என்ன படித்துள்ளார் என்றால் எனது அப்பா படிக்கவில்லை. 9 ம் பிரதிவாதி மாரிமுத்து எனது சகோதரர் என்றால் சரிதான். அவர் 7-ம் வகுப்பு படித்துள்ளார். வழக்கு விபரங்கள் பற்றி எனக்கு தெரியும். வாதிகள் நான்கு பேரும் சகோதர சகோதரிகள் ஆவார்கள். வாதிகளின் பெற்றோர்கள் பெயர் தெரியும். தாயார் பெயர் கெம்பியம்மாள் தந்தையின் பெயர் கரியப்பன். 1, 2 பிரதிவாதிகள் சகோதர சகோதரிகள் ஆவார்கள். கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் ரங்கசாமியின் மனைவி 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான். 4, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதியின் குழந்தைகள் என்றால் சரிதான்.

1, 2 பிரதிவாதிகளின் தாயார் ராஜம்மாள் இறந்து விட்டார். வாதிகளின் தாயார் கெம்பம்மாளும் இறந்து விட்டார். கிரையம் கொடுத்த ரங்கசாமி இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்துபோன ரங்கசாமிக்கு எனது தகப்பனார் உறவினர். வாதிகள் அனைவரும் சின்னக்கள்ளிப்பட்டிக்கு அருகில் ரங்கம்பாளையத்தில் குடியிருக் கிறார்கள். ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது என்ன என்ன விபரங்களை சரிபார்த்து வாங்க வேண்டும் என்ற விபரம் எனது தகப்பனாருக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. சொத்தை வாங்கியதில் இருந்து வழக்கு தாக்கல் செய்யும்

வரை சுவாதீனத்தில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அது என்ன என்ன ஆவணம் என்றால் பட்டா, சிட்டா கொடுத்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் வழக்கு தாக்கல் செய்யும்போது பட்டா சிட்டா தாக்கல் செய்யவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

எனது தகப்பனார் சொத்தை கிரையம் வாங்கிய பிறகு சமன் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேட்டு பார்த்தேன் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 27 வருடங்களாக சுவாதீனத்தில் இருக்கிறேன். கெம்பியம்மாளை கெம்பம்மாள் என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். சொத்தை கிரையம் பெற்றதில் இருந்து எங்களது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.19 19:54:19 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.